# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.

**Prosecution:**PW.2

**Deposition of witness for }**

**Defence: -**

**Case No.** Sessions Case No.78/2015

| | | | |
|---|---|---|---|
| **Name** | இருளப்பன் | **S/o.** | அழகு |
| **Village** | வேலூார் ஒத்தவீடு | **Taluk** | மானாமதுரை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.2 |
| **Date** | 08.11.2021 | **Age** | 47 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 08.11.2021.**

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சிப்காட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் வேலூார் ஒத்த வீடு. ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனக்கு மருமகன். இந்த சம்பவத்தில் இறந்த இராஜேஸ்வரி என் மகள். இறந்த தனபாக்கியம் என் மனைவி. இறந்த ஆறுமுகம் என் தாயார். என் மகள் இராஜேஸ்வரியை எதிரி பாண்டித்துரைக்கு திருமணம் செய்து வைத்தேன். அவர் ஒரு குற்றவாளி. அவர் தினமும் குடித்துவிட்டு வந்து என் மகளுடன் சண்டை போடுவார். அடிக்கடி கொடுமைப்படுத்துவதால் என் மகள் என் வீட்டிற்கு 10 நாட்களுக்கு ஒரு முறை வந்துவிடும். நானும், எனது மனைவி தனபாக்கியமும் சமரசம் செய்து அனுப்பி வைப்போம். மீண்டும் என் மகள் என் வீட்டிற்கு மறுபடியும் சண்டை காரணமாக வந்துவிடுவார். இதன் காரணமாக எனது மகள் மானாமதுரையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது. என் மகள் கொடுத்த புகாரின்

அடிப்படையில் எதிரியின் தாயார் ஈஸ்வரி மற்றும் எதிரியின் சகோதரி தவச்லெட்சுமியை கைது செய்தார்கள். என் மகள் பிரசவத்திற்காக என் வீட்டிற்கு வந்தது. ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையின் பெயர் தென்பாண்டியாகும். அன்றாடம் கூலி வேலைக்குச் சென்று நான் என் பேரனை வளர்த்து வந்தேன். என் மற்றொரு மகள் கார்த்தீஸ்வரி கோயம்புத்தூர் வாகரம்பாளைத்தில் மில்லில் வேலை செய்து வந்தது. நான் என் மகள் கார்த்தீஸ்வரியை பார்ப்பதற்காக 04.01.2015-ம் தேதியன்று கோயம்புத்தூருக்குச் சென்றிருந்தேன். 06.01.2015-ம் தேதியன்று இரவு சுமார் 08.30 மணியளவில் வேலூர் ஒத்த வீடு கிராமத்தினைச் சேர்ந்த முனியாண்டி மகன் வீராச்சாமி எனக்கு போன் செய்து எதிரி பாண்டித்துரை அருவாளை வைத்துக் கொண்டு அவருடைய மகனை கேட்டு என் மகளிடம் பிரச்சனை செய்ததாகவும், குஞ்சரம், மாயழகு, முத்துராக்கு மற்றும் வீராச்சாமி 4 பேர்களும் என் பேரனை பார்க்கச் செல்லும் போது எதிரி பாண்டித்துரை அருவாளை எடுத்து என் மகள் இராஜேஸ்வரியை கந்தர்கோலமாக வெட்டியதாகவும், அதைத் தடுக்கச் சென்ற என் மனைவி தனபாக்கியத்தினை வெட்டி கந்தர்கோலமாக கிடக்கப்பட்டதாகவும், அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த எனது தாயார் ஆறுமுகத்தினை அவரின் தலைமுடியைப் பிடித்து இழுத்து வந்து அருவாளை வைத்து எதிரி பாண்டித்துரை வெட்டியதாகவும் வீராச்சாமி போனில் சொன்னார். மேலும் தடுக்க யாரும் வந்தால் உங்களையும் வெட்டுவேன் எனக் கூறினார் என்றும், 3 பேரையும் கொலை செய்துவிட்டு என் பேரனை தூக்கிக் கொண்டு போய்விட்டதாக போனில் சொன்னார். அதிர்ச்சியடைந்த நான் என் மகள் கார்த்தீஸ்வரி மற்றும் திருப்பூர் மில்லில் வேலை செய்து வந்த என் மகன் கார்மேகக்கண்ணன் ஆகியோர்களை கூட்டிக்கொண்டு நான் மானாமதுரை அரசு

மருத்துவமனைக்கு மறுநாள் 07.01.2015-ம் தேதியன்று காலை 06.30 மணியளவில் வந்தேன். நான் என்னிடம் தகவல் கூறிய வீராச்சாமியிடம் சம்பவம் குறித்து சிப்காட் காவல் நிலையத்தில் புகார் அளிக்குமாறு கூறினேன். வீராச்சாமி மானாமதுரை சிப்காட் காவல் நிலையத்தில் புகார் அளித்ததை கேள்விப்பட்ட நான் மானாமதுரை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடிக்கப்பட்ட என் மகள் இராஜேஸ்வரி, என் மனைவி தனபாக்கியம், என் தாயார் ஆறுமுகம் ஆகியோர்களின் உடல்களை பெற்றுக்கொண்டு நல்லடக்கம் செய்ய ஊருக்கு பெற்றுச் சென்றேன். இது சம்மந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்க விவரங்கள் கூறினேன்.

<u>எதிரி தரப்பு கு.வி:</u>

எனக்கு சொந்த ஊரே வேலூார் ஒத்த வீடு. நான் பிறந்ததிலிருந்து அங்கு தான் இருக்கின்றேன். எதிரி பாண்டித்துரையும் பிறந்ததிலிருந்து ஒத்த வீடு கிராமத்தில் தான் இருந்து வருகிறார். என்னுடைய முழு விருப்பத்தின் பேரில் தான் எதிரி பாண்டித்துரைக்கு என் மகள் இராஜேஸ்வரியை திருமணம் செய்து கொடுத்தேன். என் மகளின் திருமணத்திற்கு முன்பே எதிரி எனக்கு உறவினர் தான். ஒத்த வீட்டில் மொத்தம் 10 முதல் 15 வீடுகள் தான் இருக்கும் என்றால் சரிதான். என் 2-வது மகளின் கணவர் பில்லூார் கிராமத்தினைச் சேர்ந்தவர். இறந்த இராஜேஸ்வரியின் திருமணத்திற்கு முன்பாகவே என் 2-வது மகள் கார்த்தீஸ்வரிக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது. என் 2-வது மகளும், அவரின் கணவரும் ஒருவரை ஒருவர் விரும்பி திருமணம் செய்து கொண்டார்கள். எனது 2-வது மகளின் திருமணத்திற்கு பிறகு அவர்கள் இருவரும் கோயம்புத்துாரில் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான். என் மகள் இராஜேஸ்வரி மற்றும் எதிரி பாண்டித்துரையின்

திருமணத்தின்போது நான் வெளிநாட்டில் வேலை செய்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் வெளிநாட்டில் தான் வேலை செய்தேன் என்றும், அவர்கள் திருமண சமயத்தில் தான் ஊருக்கு வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் 2-வது மகளின் கணவர் சிவகங்கை அருகிலுள்ள சக்கந்தி என்னும் ஊரிலுள்ள மில்லில் வேலை செய்தார். என் 2-வது மகள் மட்டும் கோயம்புத்தூரில் உள்ள மில்லில் வேலை செய்தார். நான் 2 அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறை என் மகளை பார்க்க கோயம்புத்தூருக்கு செல்வேன். நான் அந்த சமயத்தில் ஊரில் தான் இருந்தேன். கோயம்புத்தூரில் வேலை நான் பார்க்கவில்லை. மேற்படி கோயம்புத்தூருக்கு 04.01.2015-ம் என் மகளை பார்ப்பதற்காகச் சென்று அங்கேயே தங்கியிருந்தேன். என் மகள் மில் குடியிருப்பில் தனியாக வசித்து வந்தார் என்றால் ஒரு குடியிருப்பில் 4, 5 பெண்கள் தங்கியிருப்பார்கள். அவர்களுடன் தங்கியிருப்பார். நான் கோயம்புத்தூரில் உள்ள ஒரு த னியார் உணவு விடுதியில் சம்பவ காலத்தில் புரோட்டா மாஸ்டராக வேலை செய்து வந்தேன் என்றும், வழக்கிற்காக என் 2-வது மகளை பார்ப்பதற்காக சென்றேன் என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பூர்வீக பாத்தியப்பட்ட 80 செண்ட் நிலம் வேலூார் கிராமத்திலுள்ளது. எதிரி பாண்டித்துரைக்கு சுமார் 4, 5 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனக்கு எதிரி பாண்டித்துரை எவ்வளவு நிலம் வைத்திருந்தார் என்றும், அவர் பொருளாதார ரீதியாக நல்ல நிலையில் இருந்தார் என்றும், வழக்கிற்காக மேற்படி விவரங்களை தெரியாது என்றும் பொய்யாக சொல்லுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விவசாயம் தவிர, விறகு வெட்டுதல், கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வந்தார் என்றும் மேற்படி விவரங்களை தெரியாது என்றும் பொய்யாக சொல்லுகிறேன் என்றும் சொன்னால்

சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன எனது மகள் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் நாங்களும், எதிரியும் சமாதானமாக சென்று விட்டோம் என்றும், இந்த விவரத்தினை வழக்கிற்காக மாற்றிச் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நானும், எதிரி பாண்டித்துரையும் அந்த வழக்கில் காவல் நிலையத்தில் வைத்து சமரசமாக செல்வதாக எழுத்துப்பூர்வமாக வாக்குமூலம் கொடுத்ததின் மூலமாக அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது என்றும் மேற்படி விவரங்களை தெரியாது என்றும் பொய்யாக சொல்லுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் மானாமதுரைக்கு 07.01.2015-ம் தேதியன்று வந்தவுடன் போலீஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். அப்போது என் செல்போனையோ அல்லது செல்போன் நம்பரையோ அதற்கு வந்த அழைப்புகள் சம்மந்தமாகவோ காவல் துறையினர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு 06.01.2015-ம் தேதியன்று அ.சா.1 வீராச்சாமி போன் மூலம் தகவல் சொல்லவில்லை என்றும், அதனால் தான் என் செல்போனுக்கு வந்த அழைப்புகள் சம்மந்தமாக காவல் துறையினர் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு பக்கத்தில் வடக்கு திசையில் எதிரியின் வீடு உள்ளது. சுமார் 100 அடி துாரம் இருக்கும். சத்தம் போட்டு கூப்பிட்டால் கேட்கும் துாரத்தில் தான் உள்ளது. எதிரியின் TN 63 K 9093 இரு சக்கர வாகனம் என் வீட்டில் தான் இருக்கும். எதிரி பாண்டித்துரைக்கு வெளியூர் சென்று வேலை பார்க்கும் பழக்கமும் உடையவர் என்றால் வெளியூர் எல்லாம் போகமாட்டார். அவருக்கும், என் மகளுக்கும் கணவன், மனைவிக்குள் இருக்கும் சாதாரண சண்டை தான் இருக்கும் என்றும், பெரிய சண்டைகள் எல்லாம் இருக்காது என்றால் சரியல்ல. இரண்டு வீடுகளும் அருகருகே

உள்ளதால், என் மகள் இராஜேஸ்வரி இரண்டு வீடுகளிலும் இருக்கும் என்றால் பெரும்பாலும் என் வீட்டில் தான் இருக்கும். இந்த சம்பவ நடந்த சமயத்தில் என் மகளுக்கு கைக்குழந்தை இருந்த காரணத்தினால் தான் என் வீட்டில் இருந்தார் என்றும், மனக்கசப்பினால் என் வீட்டிற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வீராச்சாமி எனக்கு 06.01.2015-ம் தேதியன்று போன் செய்து எந்தத் தகவலும் கொடுக்கவில்லை என்றும், என் ஊர்க்காரர்கள் தான் என் பொண்ணு, என் மனைவி, என் தாயார் ஆகியோர்கள் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு இறந்துவிட்டார்கள் என்ற விவரத்தை சொன்னார்கள் என்றும், இவ்வழக்கிற்காக மாற்றிச் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.